தெரனியகல பிரதேச சபை - 2020

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தெரனியகல பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயற்பாட்டு கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் தெரனியகல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) அதிகார சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) அதிகார சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான 04 காணிகளின் பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | இது தொடர்பாக எதிர்காலத்தில் கண்டறிந்து நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களின் பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் ஒப்பந்தம் செய்யப்படாத 19 வேலைகளிற்கு ரூபா 1,270,000 கடன்படுனர் ஏற்பாடு மேற்கொண்டதால் அப்பெறுமதியால் மூலதன செலவு மற்றும் கடன்படுனர் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் ஒப்பந்தம் செய்யப்படும் வேலைகளை மாத்திரம் கடன்படுனரென காட்டுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | ஒப்பந்தம் செய்யப்படும் வேலைகளிற்கு மாத்திரம் கடன்படுனர் ஏற்பாடு ஒதுக்க வேண்டும். |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்ககுகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| 05 கணக்கு விடயங்களிற்குரிய நிதிக்கூற்றுக்கள் பிரகார பெறுமதி ரூபா 214,322,567 மற்றும் அட்டவணை பிரகார பெறுமதி ரூபா 181,054,561 ஆனதில் ரூபா 33,268,006 ஆன வித்தியாசம் நிலவியது. | வித்தியாசம் தொடர்பாக எதிர்காலத்தில் கண்டறிந்து நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் மீதிகள் அதற்குரிய துணை ஏடுகளுடன் இணங்க வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 571 (2) | 2010 ஆண்டு முதல் 2018 ஆண்டு வரையான காலத்திற்குரிய காலம் கடந்த ரூபா 407,095 ஆன 03 வைப்புக்கள் சம்பந்தமாக தொடர்புடைய பிரமாணம் பிரகாரம் நடடிக்கை எடுத்திருக்கவில்லை. | காலம் கடந்த வைப்புக்கள் தொடர்பாக எதிர் காலத்தில் நடடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | உள்ளூராட்சி ஆணையாளரின் 01/2010 இலக்க சுற்றறிக்கையின் 7.4(iv) பிரிவு | 05 அங்கத்தவர்கள் மருத்துவமல்லாத காரணங்களிற்காக சபைக்கு சமுகமளிக்காத 07 சந்தர்ப்பங்களிற்கு மீளாய்வாண்டினுள் ரூபா 110,000 படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | எதிர் காலத்தில் மகா சபைக்கு சமுகமளிக்காத அங்கத்தவரிகளின் படிகள் தொடர்பில் உள்ளூராட்சி ஆணையாளரின் 01/2010 இலக்க சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையிற்கு மாற்றமாக செய்யப்பட்ட கொடுப்பனவுகளை அறவிட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 7,222,952 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 4,683,358 ஆகும்.

**2.2 வருமான நிருவாகம்**

**வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | வீதவரி மற்றும் குத்தகை | | |
| (i) | நிலுவை வீதவரி மீதி ரூபா 271,326 ஆனது. அம் மீதியை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கொரோனா தொற்று நிலைமை காரணமாக ஆதனத்தடை செய்யும் நடவடிக்கை மேற்கொள்ள முடியாது போனதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சட்ட பிரகாரம் நடவடிக்கை எடுத்து நிலுவை வீதவரி அறவிட வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டு இறுதியில் நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 420,517 ஆனது. அம் மீதியை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காணி உரிமையாளர்களின் தகவல்கள் இல்லாத காரணத்தால் அறவிடுவதில் கடினம் இருப்பதாகவும் கொரோனா தொற்று நிலைமை காரணமாக காணி உரிமையாளர்களை தேடிச் செல்ல மற்றும் நடமாடும் சேவை நடாத்த முடியாது போனதால் அறவீடு குறைய காரணமானதாவும் எஞ்சிய ஏக்கர் வரி நிலுவை வருமானத்தை நடமாடும் சேவையை ஈடுபடுத்தி அறிவட நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் | | |
| | மாகாண சபை பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2020 திசெம்பர் 31 திகதி கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 7,785,507 ஆன மீதி காணப்பட்டது. | கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணத்தை அறவிட எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சபைக்கு அறிவிடப்பட வேண்டிய வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

**3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | தெரனியகல நகரம் மற்றும் பிரதேச சபை எல்லையில் நீர் விநியோகத்திற்காக சபையினால் லிஹினியாகல மற்றும் கஹபடே எனும் நீர் மூலங்களை பயன்படுத்தி இருந்த போதும் அந்நீர் மூலங்கள் இரண்டிலும் நீர் சுத்திகரிப்பு இடம்பெறாததுடன் கஹபடே நீர் | விநியோகிக்கப்படும் நீரை பாவணைக்கு உகந்ததாக்க தேசிய நீர் வழங்கல் சபை மற்றும் தெரனியகல பிரதேச சபையும் இணைந்து லிஹினியகல பிரதேசத்தில் நீர் சுத்திகரிக்கும் முறைமை | நுகர்வோரிற்கு உரிய நியமத்தில் சுத்திகரிக்கப்பட்ட நீரை விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மூலத்திலிருந்து பெறப்படும் நீர் நீர்தாங்கி ஒன்றினூடாகவும் லிஹினியாகல மூலத்திலிருந்து பெறப்படும் நீரி நேரடியாக கால்வாய் ஊடாகவும் நுகர்வோரிற்கு விநியோகம் செய்யப்படுவதாக அவதானிக்கப்பட்டது. மேலும் விநியோகிக்கும் நீரிற்கு குலோரின் கலக்கப்பட்ட போதும் அது நியம தன்மைக்கு அமைய செய்யப்படுவதில்லை எனவும், அது தொடர்பான அறிக்கை வைத்துக் கொள்வதில்லை எனவும் அவதானிக்கப்பட்டுதுடன் நீர் மாதிரி பரிசோனையின் போது அந்நீர் பயன்பாட்டிற்கு உகந்ததல்ல என உறுதியாகிய போதும் அதற்காக ஒழுங்கான தீர்வை வழங்க முடியாதிருந்தது. மேலும் பொருத்தியுள்ள 1693 நீர்மாணிகளில் 757 மாணிகள் நீரில் காணப்படும் சேறு மற்றும் கழிவுப் பொருட்கள் காரணமாக செயலிழந்திருந்தன. | ஒன்றை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | உடபொல தோட்டத்தில் காணப்படும் மயானத்தினுள் சுடலை ஒன்றை நிர்மாணிக்க காணி சுவீகரிப்பு சட்டத்தின் (460 அத்தியாயம்) விரிவான செயற்பாடுகளின் கீழ் இரண்டாம் பிரிவின் ஏற்பாடுகள் 2019 ஒக்டோபர் 28 திகதி கிடைத்திருந்த போதும், அதன் பின்னர் சாதாரண செயற்பாட்டிற்கு பதிலாக 38(அ) உப ஏற்பாட்டின் மூலம் காணியின் உடமையை பொறுப்பேற்காது சுடலையை நிர்மாணிக்க 2019 ஆண்டு முதல் 2021 பெப்ரவரி மாதம் வரை ரூபா 22,525,925 செலவிடப்பட்டிருந்தது. மேலும் கணக்காய்வு திகதியன்றும் காணி சுவீகரிக்கும் செயற்பாட்டின் 4 ஆம் பிரிவின் கீழான ஏற்பாடு வரை மாத்திரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | காணி சுவீகரிக்கும் செயற்பாட்டின் 4 ஆம் பிரிவின் கீழான ஏற்பாடு வரை தற்போது நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அதன் பிரகாரம், இக் காணியை சுவீகரிக்கும் செயற்பாடு இடம்பெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிர்மாணம் மேற்கொள்ள முன் காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரகாரம் செயற்பட்டு காணியின் உடமையை பொறுப்பேற்க வேண்டும். |

## 3.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 2017 ஆண்டு முதல் 2020 ஆகஸ்ட் வரையான காலத்தில் செயலிழந்து காணப்படும் சபைக்கு சொந்தமான ரூபா 16,695,000 பெறுமதியான 2018 ஒக்டோபர் 30 திகதி கிடைத்த பெகோ லோடரை திருத்துத நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெகோ லோடரிற்காக விலை மனு கோரி திருத்த வேலைகளை மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | பயன்படுத்தப்படாத சொத்துக்களை திருத்தம் செய்து ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும். |

**3.3 செயற்திட்டங்கள், செயற்பாடுகள் அல்லது மூலதன வேலைகளில் தாமதங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2014 தேசத்திற்கு மகுடம் தேசிய வேலைத் திட்டத்திற்கு சமாந்திரமான தெரனியகல பேருந்து தரிப்பிட கடையறை நிர்மாண ஒப்பந்தம் ரூபா 44,801,291 ஆன மதிப்பீட்டு கிரயத்தின் மீது 2013 திசெம்பர் 26 திகதி அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு இறுதிவரை இந் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாத காரணத்தால் 2014 ஆகஸ்ட் 12 திகதி 31 கடையறைகளை குத்தகை வழங்க டென்டர் கோரி 29 குத்தகைகாரர்களிடமிருந்து பெற்ற ஒரே தடவையிலான முற்பணம் (key money) ரூபா 24,299,000 தொகையை அச் செயறபாட்டிற்கு பயன்படுத்த முடியாதிருந்தது. | பேரூந்து தரிப்பிட நிர்மாண பணிகள் கேகாலை மாவட்ட செயலகத்தினால் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட போதும் அப் பணிகள் உரிய முறைப்படி இடம்பெறாததால் பேரூந்து தரிப்பிட நிர்மாணப் பணிகளை தற்போதும் மேற்கொள்ள முடியாதுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | குத்தகைகாரர்களிடமிருந்து பெற்ற ஒரே தடவையிலான முற்பணம் தொடர்பில் தீர்மானமொன்றை எடுக்க வேண்டும். |
| (ஆ) | வாகன தரிப்பிட தொகுதி ஒன்றை நிர்மாணிக்க தெரனியகல, பனாவல பலநோக்கு கூட்டுறவு சங்கத்துடன் ரூபா 1,369,224 ஆன மதிப்பீட்டு கிரயத்திற்காக 2019 ஆகஸ்ட் 13 திகதி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்த போதும் குறித்த சங்கத்தினால் வேலையை ஆரம்பிக்காததன் காரணமாக நேர் ஊதிய முறையின் கீழ் நிர்மாணிக்க எடுக்கப்பட்ட தீர்மானத்தின் மீது மீளாய்வாண்டில் ரூபா 231,952 செலவில் கொன்கிரீட் தூண்கள் மாத்திரம் நிர்மாணித்திருந்ததால் கணக்காய்வு திகதியளவில் சபைக்கு சொந்தமான வாகனங்கள் மழை மற்றும் சூரிய வெளிச்சத்திற்கு திறந்து விடப்பட்டிருந்ததுடன் அவற்றின் பாதுகாப்பிற்காக விரைவில் நிர்மாணப் பணிகளை மேற்கொள்ள கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | நிலவிய கொரோனா தொற்று நிலைமை காரணமாக பிரதேச சபை வருமான நிலமை கீழ் மட்டத்தில் காணப்பட்டதால் அந் நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்ட போதும் அக் கருத்திட்டத்தை விரைவில் 2021 ஆண்டில் நிறைவு செய்து முடிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | விரைவில் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |